ARTICLE 03 · கட்டுரை 03 | சங்க இலக்கியமும் தமிழர் வாழ்வியலும்

Special Issue · Vol. 10, No. 03 (October 2026) · pp. 21–27

# கரிகாற் பெருவளத்தான் கலைஞர்களுக்கு அளித்த கொடை

*The Gifts Bestowed by Karikala Peruvalathan upon the Artists*

**முனைவர் சோ. மனோன்மணி**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 019

***Dr. S. Manonmani**, Assistant Professor, Department of Tamil, Urumu Dhanalakshmi College, Tiruchirappalli – 620 019, Tamil Nadu, India*

**மின்னஞ்சல்:** manoudc@gmail.com

### ஆய்வுச் சுருக்கம்

சோழன் கரிகால் பெருவளத்தான் சங்க கால கலைஞர்களின் வாழ்வியலுக்கு அடிக்கோலாக அமைந்தவன். அவனுடைய கொடைப்பண்பாலும் ஆட்சி சிறப்பாலும் மக்களையும் கலைஞர்களையும் இரு கண் போல் நடத்தினான். தன்னை நாடி வந்த கலைஞர்களைக் கைவிட்டதில்லை. இக்கொடை மாண்பினைப் பொருநராற்றுப்படை எனும் சங்க நூல் சிறப்பாக எடுத்தியம்புகிறது. அதுமட்டுமன்றி, பத்துப்பாட்டு நூல்களில் பொருநர் என்பவர் யார், மற்றவர் போல வேடமிட்டு நடிக்கக் கூடிய நலிவுற்ற கலைஞர்கள் வாழ்க்கைக்கு ஆதரவு நல்கிய மன்னர்கள் சிறப்பு குறித்தும் பரிசில் பெற்ற கலைஞன் கொடை வழங்கிய மன்னர்களிடம் மற்ற கலைஞர்களை ஆற்றுப்படுத்தும் பாங்கினையும் விளக்கும் வகையிலும் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** பாணர்களும் கலையும்; ஆற்றுப்படை; கூத்தரும் பாணரும்; பாணர்களுக்கு ஆதரவு; கொடைகள்

### Abstract

Chola king Karikala Peruvallathan laid the foundation for the way of life and livelihood of artists during the Sangam period. Through his generosity and exemplary governance, he treated both his people and the artists as the two precious eyes of his kingdom. He never turned away the artists who came seeking his support. The Sangam literary work Porunaratrupadai beautifully portrays this noble virtue of generosity. Moreover, Porunaratrupadai, one of the works of the Pathupattu (Ten Idylls), speaks about the porunas, wandering artists who could disguise themselves and perform like others, as well as highlighting the greatness of the kings who supported and sustained the lives of these struggling artists. This research article also explores how artists who received gifts and patronage guided and encouraged other artists towards generous kings.

**Keywords:** Panars and their art; Arruppadai; Koothar and Panar; support for the Panars; gifts

## முன்னுரை

சங்க கால மக்களின் வாழ்க்கையினை அறிய உதவும் சாதனமாகப் பத்துப்பாட்டு நூல்கள் இருக்கின்றன. அக்கால மக்களின் வாழ்க்கை, கலை நிறைந்த வாழ்க்கையாக உள்ளது. சங்க கால மக்களின் வாழ்வியல் எவ்வளவு நலிவுற்ற வாழ்க்கையாக இருந்தாலும் அவர்களின் வாழ்க்கை, இன்பம் நிறைந்ததாக உள்ளது. கலைஞர்களுக்குக் கொடையளித்த மன்னர்களில் கரிகால பெருவளத்தான் குறிப்பிடத்தக்கவன். மாறுவேடம் பூண்டு நடிக்கக் கூடிய கலைஞர்கள் ஆற்றுப்படுத்தப்பட்டு கரிகாலனிடம் அணுகிச் சென்றால் அவர்களுக்கு எட்டடி

அரண்மனை வாயில் வரை வந்து, வழியனுப்பி வைத்து மீண்டும் அரண்மனை உள் நோக்கிச் சங்க கால பொருநர்களாகிய கலைஞர்களுக்கு அளித்த கொடைத்தன்மையினை இக்கட்டுரையின் வாயிலாகக் காணலாம்.

## பொருநன் என்பவர் யார்?

"பொருநன்" என்ற சொல்லுக்கு "வீரர்" மற்றும் "மற்றொருவர் போல வேடம் தரித்துக் கொண்டு யாழ் இசையமைத்து ஆடிப் பாடுபவன்" என்றும் பொருள். அதில் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் என்று மூன்று வகையினர் இருந்தனர். இம்மூவகையில் பொருநராற்றுப்படையில் பேசப்படும் பொருநர் போர்க்களம் பாடுவோர். திருவிழாவிலே பொருநர்கள் கூடித் தங்கள் கலைத்திறனைக் காட்டிப் பின்னர் விழா முடிந்ததும் வேற்றூர் செல்வதாகத் தொடங்குகிறது பொருநராற்றுப்படை, இதை

"வேறுபுலம் முன்னிய விரகுஅறி பொருந"[1]

என்ற வரிகளால் அறியலாம்.

## கரிகாற்சோழன் காலம்

இளஞ்சேட் சென்னியின் மகன் கரிகாற் பெருவளத்தான். கரிகாற் சோழனுக்குத் திருமாவளவன், பெருவளத்தான் என்று சிறப்புப் பெயர்களும் உண்டு. சேரன் செங்குட்டுவன் காலம் சிலப்பதிகாரம் என்று உணர்கிறோம். கரிகாலன் என்ற பெயரில் இருவர் இருந்தனர் என்று ஆராய்ச்சியறிவு மிக்க சிவராசப்பிள்ளை கூறுகின்றார். சோழநாடு ஓரரசர் ஆட்சிக்கு உட்படாமல் பல சிறு நாடுகளாகப் பிரிந்து பலர் ஆட்சியில் இருந்திருக்கின்றனர். இதனால் குழப்பம் இருக்கத்தான் செய்திருக்கிறது. இரண்டாம் கரிகாலனுக்கு இரண்டு தலைமுறை முந்தியவன் முதலாம் கரிகாலன் என்று கூறப்படுகிறது. இக்கரிகாலன் காலம் 2ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

## செல்வத்தின் செருக்கு

பரிசில் பெற்ற பொருநர் எதிரே வரும் பொருநருக்கு ‘கரிகாற் பெருவளத்தானிடம் போ’ என்று ஆற்றுப்படுத்துகிறான். பரிசில் பெறுபவனுக்கு கரிகாற் பெருவளத்தான் முல்லை மொட்டுப் போன்ற முனை மழுங்காத அரிசிச் சோறு படைக்கிறான். கழுத்து வரை உணவு வந்துவிடும் அளவு கறி விருந்து அளிக்கிறான். "உழுது உழுது கலப்பை எப்படித் தேய்ந்து போகுமோ அப்படி இறைச்சியை உண்டு பற்கள் தேய்ந்து போயின" என்பதை,

"முரவை போகிய முரியா அரிசி
கொல்லை உழுகொழு ஏய்ப்ப பல்லே
எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி"[2]

என்ற வரிகளால் அறியலாம். உணவு வழங்கும் முறையே செல்வவளத்தை மெய்ப்பித்து நிற்கின்றது.

## யாழ் இசைப்பயன்

இசை கேட்போர் உள்ளத்தில் இன்பம் விளைவித்தலோடு மனதைப் பண்படுத்தித் தூய்மை செய்து அருள்நெறியில் சேர்க்கும். எனவே தான் திரைப்படப் பாடலாசிரியர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்,

"துன்பக்கடலைத் தாண்டும் போது
தோணியாவது கீதம்
அன்புக் குரலில் அமுதம் கலந்தே
அருந்தத் தருவது கீதம்
எங்கும் சிதறும் எண்ணங்களையும்
இழுத்து வருவதும் கீதம்
இணைத்து மகிழ்வதும் கீதம்
துயர் இருளை மறைப்பதும் கீதம்"[3]

என்று இசையின் மேன்மையை உயர்த்திக் கூறுகிறார். உயிர்கொலை செய்யும் வேடனையும், கள்வனைக்கூட இசை மாற்றிவிடுகிறது என்பதை,

"ஆறுஅலை கள்வர் படைவிட அருளின்"[4]

என்ற வரிகள் மெய்ப்பித்து நிற்கின்றது. யாழ் பொருநனால் இசைக்கப்படுகிறது என்பதை பெரும்பாணாற்றுப்படை எடுத்துக்காட்டுகின்றது. பேரியாழ் - 21 நரம்பு, மகரயாழ் - 19, சகோடயாழ் - 14, செங்கோட்டியாழ் - 7 என்று யாழ் நரம்புகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. யாழ் எப்படி இருக்கும் என்ற கேள்விக்குத் திருமணத்திற்கு ஒப்பனை செய்யப்பட்ட மணமகள் போல என்ற உவமை பாட்டிற்குச் சிறப்பு சேர்க்கிறது.

## பாடினி வர்ணனை

- ஆற்றுமணல் போலக் கூந்தல்
- பிறை போல நுதல்
- வில் போலப் புருவங்கள்
- மழை போலக் குளிர்ச்சி பொருந்திய கண்கள்
- இலவம் பூப் போலச் சிவந்த வாய்
- முத்துப் போலப் பற்கள்
- குழைகள் அசைந்தாடும் காது
- நாணத்தால் கவிழந்த கழுத்து
- மூங்கில் போன்ற தோள்
- காந்தள் போன்ற விரல் முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல் என்று சங்க இலக்கியம் சொல்வது போலச் சொல்கிறார் ஆசிரியர்.
- கிளியின் வாய் போல நகம்,
- பிறர்க்கு வருத்தத்தை தோற்றும் முலைகள்,
- உண்டென்று உணரப்படாத நுண்ணிடை,
- யானைத் தும்பிக்கை போன்ற தொடை

இப்படியாக இன்றைக்கு மேற்சொன்ன இந்த வர்ணனையைக் கடந்து யாரும் சொல்லிவிட முடியாது. பாடினியைப் பற்றி முழுமையாகவும் இயல்பாகவும் சொல்லப்பட்டுள்ளது.

"அறம்போல் கூந்தல் பிறைபோல் திருநுதல்
கொலைவில் புருவத்து கொழுங்கடை மழைக்கண்
இலவுஇதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்
பலஉறு முத்தின் பழிதீர் வெண்பல்"[5]

இப்படியான வர்ணனை பாட்டிற்கு மெருகூட்டுகிறது.

## பண்பாடு கலாச்சாரக் காப்பு

பொதுவாக நமது இல்ல விழாக்களுக்கு முதல் அழைப்பிதழை நமது குலதெய்வத்திற்கு வைத்து வழிபடுவது வழக்கம். அதேபோல பொருநர் ஓர் இடத்தில் இருந்து கிளம்பும் போது காடுறை தெய்வம் காளியை வழிபட்டுச் செல்வது வழக்கம். இதனை,

> "காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை"[6]

என்ற வரிகள் உணர்த்தி நிற்கின்றது.

## பொருநன் எப்படிப்பட்டவன்

கூத்தர்களுக்கெல்லாம் பொருநனே தலைவன். பாடுவதில் வல்லவன். யாழ் வாசித்தலிலும், ஆடுவதிலும் வல்லவன். இதிலிருந்து பேச்சு, பாட்டு, நடிப்பு மூன்றிலும் பொருநன் வல்லவன் என்பது புலனாகிறது. பாட்டு, யாழ் இசைத்தல், கூத்து இவை மூன்றும் மூவேந்தர் ஒருங்கே அமர்ந்திருக்கும் காட்சி போல இருக்குமாம். மற்றவர்கள் மனதில் இருக்கும் கருத்தினைக் குறிப்பால் அறிய வல்லவன் பொருநன். பசியோடு இருக்கும் வெளவால் பழுத்த பழத்தை நாடிச் செல்வது போல நான் கரிகாற் பெருவளத்தானைப் பார்க்கப் போனேன். அவன் கொடுத்த பொருளைப் பார்த்தவுடன் வறுமையால் இளைத்த என் உடல் நடந்து சென்றதினால் ஏற்பட்ட மனச்சோர்வும் நீங்கி பூரிப்பில் மகிழ்ச்சியாகி விட்டேன். எனவே நீயும் பெருவளத்தானை தேடிப்போ. நீ நன்றாக இருப்பாய்! என வழிப்படுத்தும் தியாக உள்ளம் பொருந்தியவன் பொருநன்.

## கரிகாற் பெருவளத்தானின் நட்புணர்ச்சி

தனக்குச் சரிசமமானவர்களுடன் நட்பு கொண்டாட முடியும். ஆனால் கீழானவர்களிடம் மிகச்சிறந்த நட்பு வைத்துக்கொள்ள வேண்டுமெனில் ஒத்த உணர்ச்சியுள்ளவர்களால் தான் முடியும். நட்பிற்குக் காரணம் உணர்ச்சி ஒன்றுபடுதல் எனவே வள்ளுவர் சொல்வது போலப்,

> "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
> நட்பாம் கிழமை தரும்"[7]

என்பதற்கு இலக்கணமானவன் கரிகாற்பெருவளத்தான். நீண்ட நாட்கள் பழகிய நண்பர்களிடம் பழகுவது போல பொருநனிடம் நடந்து கொள்கிறான். இது அவரது நட்புணர்ச்சியைக் காட்டுகிறது. பொருநன் அணிந்திருந்த கிழிந்த ஆடையை மாற்றிப் பட்டாடை கொடுத்து அணியச்செய்கிறான்.

## கரிகாற் பெருவளத்தானின் விருந்தோம்பல் பண்பு

தன்னிடம் பாடிப் பரிசில் பெற வந்த கலைஞர்களிடம் இனிமையாகப் பேசுகிறான். விருந்தோம்பல் என்பது நாம் அளிக்கிற உணவில் இல்லை. அதைக் கொடுக்கும் விதத்தில் தான் இருக்கிறது. கரிகாற் பெருவளத்தான் பார்வையிலே அன்பைப் பொழிகிறான். பொதுவாக விருந்தோம்பல் பண்பு என்பது பெண்களுக்குரியது எனத் தமிழ் மரபு கொண்டாடுகிறது. ஆனால் கரிகாற் சோழனிடம் மெய்யன்பு' 'இனியநோக்கு' 'இன்முகம்' இவை மூன்றும் இணைந்து விருந்தோம்பல் பண்பில் பெருமை பெறுகிறான்.

> "முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
> இன்சொ லினதே அறம்"[8]

நமது இல்லத்திற்கு விருந்தினர் வந்தால் வாசல் வரை சென்று வழி அனுப்பி வைப்பது போலக் கரிகாற் பெருவளத்தான் பொருநனை விட்டுவிட்டு வருகிறான்.

"காலின் ஏழடி சென்று"

என்ற வரிகளால் உரை முடிகிறது. அரசனானவன் கலைஞர்களை விருந்தினராகப் பார்க்கும் பண்பு கொண்டவன்.

## கரிகாற் பெருவளத்தானின் உருவம்

வேல் கையில் வைத்திருப்பான். மிகவும் அழகான தோற்றம் கொண்டிருப்பான். பல தேர்களை உடைய வீரன் முருகன் போலச் சீற்றம் கொண்டவன். இதனைத்

"வேன்வேல்
உருவப் பல்தேர் இளையோன் சிறுவன்
முருகன் சீற்றத்து உருக்கெழு குருசில்"[9]

என்று முத்தாடாமக்கண்ணியார் கூறுகிறார். தன் தாயின் கருவிலே இருந்தபோதே அரச உரிமையைப் பெற்றான் என்பதை,

"தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி"[10]

என்ற வரிகளால் அறியலாம். சோழனையும் பாண்டியனையும் வென்ற வீரன் கரிகாலன்.

## கொடைத்திறன்

நமக்கு எத்துணை வறுமை இருந்தாலும் கரிகாற்சோழனுக்கு முன்னே சென்றால் அத்துணை வறுமையும் தீர்ந்து விடும். பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுப்பவன்.

- கன்றை ஈன்ற பசு
- கன்றை விரும்பிப் பார்ப்பது போல்
- நும்மை ஆர்வத்துடன் நோக்கும்
- தன்மை வாய்ந்தவன் கரிகாற்சோழன்

அதனை,

"ஈற்று ஆ விடுப்பின் போற்று"[11]

என்ற வரிகளால் விளக்குகிறார் முடத்தாமக்கண்ணியார். பொன்கலத்திலே உணவு வழங்கும் கொடைத்திறன் படைத்தவன். உண்பீர்! உண்பீர்! என்று வாரி வழங்கும் வள்ளல் தன்மை வாய்ந்தவன். அதனை,

"பெறல் அருங்காலத்தில் பெட்டாங்கு உண்க"[12]

என்ற வரிகளால் அறியலாம். உணவு மட்டும் இன்றி பூமணம் கமழும் கன்றையும் போதும் போதும் என்று சொல்லும் அளவு வாரி வாரி வழங்கும் தன்மையுற்றவன் என்பதை,

"பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர
வைகல் வைகல் கைகவி பருகி"[13]

என்ற வரிகள் சோழனது கொடைத்திறனை மெய்ப்பித்து நிற்கின்றது.

## கரிகாற் பெருவளத்தானின் அறிவும் நுட்பமும்

கரிகாற் பெருவளத்தான் இளைஞனாக இருந்த போது ஒரு சிக்கலான வழக்கு அவரிடம் வந்தது. வழக்கைக் கொண்டு வந்தவர்கள் இவன் சின்ன வயதுடையவனாக இருக்கின்றானே என்று ஐயுற்றனர். அதைக் குறிப்பால் உணர்ந்த கரிகாற்சோழன் நாளை வாருங்கள் என்று அனுப்பி வைத்தார். மறுநாள் அறிவு முதிர்ந்த முதியோர் போல் நரைத்த மயிரை அணிந்து வேடமிட்டு அவர்களுக்குத் தீர்ப்பளித்தார். தீர்ப்பு நீதியோடு பொருந்தியிருத்தலைக் கண்டு மகிழ்ந்தனர் என்பதை,

> "இளையோர் வண்டல் அயரவும் முதியோர்
> அவைபுக பொழுதில் தம்பகை முரண்சொலவும்"[14]

என்ற வரிகள் நமக்கு காட்டி நிற்கின்றன.

> "இளமை நாணி முதுமை எய்தி
> உணரமுடிவு காட்டிய உரவோன் மருக"[15]

என்பது இந்த நிகழ்விற்கு வலிமை சேர்க்கின்றது.

## தொகுப்புரை

- "பொருநன்" என்ற சொல்லுக்கு "வீரர்" மற்றும் "மற்றொருவர் போல வேடம் தரித்துக் கொண்டு யாழ் இசையமைத்து ஆடிப்பாடுபவன்" என்ற பொருளும் உண்டு என்பதை சான்றுகளுடன் விளக்கப்பட்டது.
- கரிகாற் சோழன் பல சிறப்புப் பெயர்களைப் பெற்றுப் பொருநர்களை மட்டுமல்லாது பாணர்களையும் போற்றிப் பாதுகாத்தவன் என்பதற்குப் பொருநராற்றுப்படை நூல் சான்று பகர்கிறது.
- பொருநன் இன்னொரு பொருநனை ஆற்றுப்படுத்தித் தன்னிடம் அனுப்பி வைத்தாலும் மனம் கோணாது இன்முகத்துடன் பொன், பொருள் வழங்கி, பசியாற்றி அனுப்பிய செய்திகளும் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- அன்பும் அருளும் நிறைந்த மனதுடன் கலைஞர்களை ஆதரித்தான் என்பதை பொருநராற்றுப்படை எனும் பத்துப்பாட்டு நூலின் மூலமாக அறிந்து கொள்ள முடிந்தது

## முடிவுரை

கலைகளில் சிறந்து விளங்குபவர் பொருநன் என்பதும் பரிசில் பெற்றுவரும் பொருநன் எதிரில் வரும் கலைஞற்களைக் கரிகாற் பெருவளத்தானிடம் சென்று பரிசில் பெற ஆற்றப்படுத்துவதும் தெளிவுற ஆய்வுக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. முடத்தாமக்கண்ணியார், பொருநராற்றுப்படை-வரி-3
2. மேலது – வரி – (113-115)
3. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் – பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள் ப.92
4. மேலது – வரி – 21
5. மேலது – வரி – 25-28
6. மேலது – வரி – 51
7. திருவள்ளுவர் – திருக்குறள் – குறள் எண் – 785

8. திருவள்ளுவர் – திருக்குறள் – குறள் எண் – 93
9. முடத்தாமக்கண்ணியார், பொருநராற்றுப்படை-வரி-130-132
10. மேலது – வரி – 132
11. மேலது – வரி – 151
12. மேலது – வரி – 156
13. மேலது – வரி – 157-158
14. மேலது – வரி – 187-188
15. பொருநராற்றுப்படை மூலமும் உரையும், கி.வா. ஜகநாதன், முதற்பதிப்பு 1985, அமுத நிலையம் லிமிடெட், சென்னை – 600014.

## References


1. Mudattamak Kanniyar, Porunaratupatai, edited by U. V. Swaminatha Iyer, Kesari press, - Chennai - 1931.
2. Pattukottai Kalyana Sundaram, Karpagam pathakalayam, Thiyagaraya Nagar, Chennai - 600 017. - Year - 2010
3. Thiruvalluvar - Thirukkural. Sakthi Karyalayam, - 1957 - Chennai -
4. Ki. Va. Jaganathan, Porunaratrupadai Original Text and Commentary First Edition: 1985 - Amudha Nilayam Limited Chennai - 600 014.